**கொழும்பில் நடைபெற்ற மீளெழுச்சியின் தூண்கள் ஆய்வரங்கில்**

**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் ஆற்றிய உரை**

**ஓகஸ்ட் 22, 2019**

**தூதுவர் டெப்லிட்ஸ்:** அனைவருக்கும் காலை வணக்கம். ஆயுபோவன், வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும். இங்கு கூடியிருக்கும் அனைவரையும் காண்பதில் மகிழ்ச்சியடைவதுடன், எனக்கு முன்னர் உரையாற்றிய மேன்மைதங்கிய பேச்சாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் நாம் அனைவரும் இங்கு கூடியுள்ளோம் என்பதற்கு அவர்கள் வழங்கிய விளக்கம் மற்றும் அவர்களுடைய கருத்துக்கள் என்னை ஈர்க்கச்செய்துள்ளன.

கலாநிதி. விஜயசேகர, கலாநிதி. ஆரியரத்ன மற்றும் அமெரிக்கத் தூதுரகத்தில் உள்ள எனது குழுவினரின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வை நடத்த கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆய்வரங்குக்கு அனைவரையும் வரவேற்பதுடன், மீளெழுச்சிக்கான தூண்கள் ஆய்வரங்கானது இலங்கையில் உள்ள சமூகங்களுக்கு நம்பமுடியாதளவு முக்கியமானது என்பதுடன், உலகத்திலுள்ள ஏனைய சமூகங்களுக்கும் இது சிறந்ததொரு முன்மாதிரியானதாகும். உங்கள் சமூகத்துக்காகவும், உங்களுடனுள்ள சக மனிதர்களுக்காகவும் நீங்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்பை நான் பாராட்டுகின்றேன்.

சர்வமத கலந்துரையாடல்களுக்கு தூதரகம் பொதுவாக ஆதரவளித்துவருகிறது. இந்த நாட்டின் நல்லிணக்க மற்றும் சமாதான முயற்சிகளுக்கு நாம் நீண்டகாலமாக ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். பன்முகத்தன்மையின் பலம் மற்றும் இன ஒற்றுமையின் ஊடாக அமைதி என்ற பலமான நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் இந்த ஒத்துழைப்பை வழங்குகின்றோம். சமூகம் என்பது அரசியலைக்காட்டிலும் உயர்வானது என்பதை நாம் நம்புகின்றோம். நம்பிக்கை மற்றும் திறன்களின் சேர்க்கையாகவே சமூகம் அமைந்துள்ளது. சமூகம் ஒரு வலையமைப்பாகும். எமது பலமான தொடர்புகள் எமது வலையமைப்புக்களை மேலும் துடிப்பானதாகவும், ஈடுபாடு கொண்டதாகவும் மாற்றும். நாம் மேலும் இணைந்து செயற்பட்டால் மேலும் மீளெழுச்சிகளைக் காணலாம். இலங்கை சமூகங்களுக்கிடையிலான சமூக கூட்டிணைப்பை அதிகரிப்பது பலவருடங்களாக, ஒருவேளை பல தசாப்தங்களாக முன்னுரிமையளிக்கப்படும் ஒன்றாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் ஐக்கியம் முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு முக்கியமானதாக மாறியுள்ளது.

நல்லிணக்கம், மரியாதை மற்றும் மீளெழுச்சி என்பன பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளதுடன், சமூக மீட்டெழுச்சியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடைமுறைகளுக்கான ஆதரவாளர்களாக உங்களைப் போன்ற மதத் தலைவர்கள் தனித்துவமான நிலையில் உள்ளீர்கள். இதனால்தான் நாம் இதுபோன்ற பயிற்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குகின்றோம்.

சமூகங்களில் உதவிகளைச் செய்வதற்கான மூலாதாரங்களாக மதத் தலைவர்கள் செயற்படுகின்றனர். இதற்குப் போதுமான உதாரணங்கள் இருப்பதாக நான் கருதுகின்றேன். சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய நிகழ்வுகளில் உங்களுக்கு சொந்த அனுபவங்கள் இருந்திருக்கும். பிரச்சினைகள் ஏற்பட்ட நேரத்திலிருந்து சமூகங்களுக்கு நீங்கள் உதவவேண்டியிருக்கும்.

ஐக்கிய அமெரிக்காவில், அனர்த்த முகாமைத்துவ வலையமைப்பில் மதத் தலைவர்கள் மற்றும் மத மற்றும் தொண்டு நிறுவனங்கள் மிக முக்கிய அங்கங்களாக காணப்படுகின்றன. அதேபோல், இந்த நிறுவனங்கள் எமது சமூகங்களில் மிகவும் முக்கியமான இடத்தில் உள்ளன. இதன் காரணமாகத்தான் நெருக்கடி ஏற்படும்போது மக்கள் உங்களிடம் அடைக்கலம் தேடுகின்றனர்.

இதன் காரணமாக எமது சொந்த நாட்டில் இந்த வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட சூழலொன்று காணப்படுகிறது. இந்த வலையமைப்பில் திடீர் நெருக்கடி பதிலிறுப்பு பகுதியான

அமெரிக்க அனர்த்த முகாமைத்துவ முகவரமைப்பு FEMA நெருக்கடி நேரங்களில் மதக் குழுக்களின் திறனை அதிகரிப்பதற்கான கட்டமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் இந்த பதிலிறுப்பு செயற்பாடுகளுக்கு மேலும் தொழில்நுட்ப உதவிகள் வேண்டும் என பெரும் எண்ணிக்கையான மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமூகங்கள் அவர்களுக்குள் ஒன்றுபட்டு இருப்பதற்கு உதவுவதன் மூலமும் அவர்களது பௌதீக மற்றும் ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் அனர்த்தத்தின் பின்னர் யாரும் கைவிட்டுச் செல்லப்படமாட்டார்கள் என்று நாம் கருதுகின்றோம். இலங்கையில் மீளெழுச்சிக்கான துண்கள் பாடத்திட்டத்தை மேம்படுத்துவதற்கு இந்த FEMA ஆவணங்கள் பயன்படுத்தப்படுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத் தலைவர்கள் மொழிகளையோ அல்லது பிரிக்கும் நடவடிக்கைகளையோ புறக்கணிக்க முடியாது. நாம் பலமாக ஒன்றிணைந்து எம்மிடையே பலவீனமாகவுள்ளவர்களுக்கு ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இது பன்முகப்பட்ட பார்வையாளர்கள், பல நம்பிக்கைகளின் பிரதிநிதித்துவத்தை கொண்டிருப்பதால் தற்பொழுது நீங்கள் மீளெழுச்சிக்கான தூண்கள் என்ற ரீதியில் உங்கள் சமூகத்துக்காகவும், உங்கள் நாட்டுக்காகவும் செயற்பட வேண்டும். பலமான அத்திவாரத்தை இடவேண்டிய தூண்களும் நீங்களே. எந்த புயல் வந்தாலும் நீங்கள் உங்கள் சமூகத்துக்காக உதவுவீர்கள் என்பது எனக்கு நன்று தெரியும்.

இந்தப் பயிற்சியில் நீங்கள் கற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிச்சயமற்ற சூழல்களில் உங்கள் சமூகங்களை வழிநடத்திச்செல்லுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் சகல மட்டங்களிலும் மதநல்லிணக்க கலந்துரையாடல்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். இது ஒரு ஆரம்பம் மாத்திரமே. பன்முகத்தன்மை சகல சமூகங்களுக்கும் பலமானதாக அமையும். இன்றையதினம் உங்களுக்கு வழங்கப்படவுள்ள தொழில்நுட்ப ரீதியான செயல்விளக்கம், சமூகங்களின் பதிலிறுத்தலுக்கான பல்வகைத்தன்மையை பலப்படுத்தும் என நம்புகின்றேன்.

இந்த ஆய்வரங்கில் வரவேற்பு தருணத்தில் இணைந்துகொள்ள என்னை அனுமதித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று பிற்பகல் நேரத்தில் நடைபெறும் அமர்வுகள் இதேமாதிரியானதாக அமையும் என்றும், அது உங்களுக்கு மேலும் வாய்ப்புக்களை வழங்கும் என்றும் நம்புகின்றேன்.

நன்றி